மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 68, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

68—

சரக்குக் கிடங்குகள்

***37720—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பராமரிப்பிலுள்ள சரக்குக் கிடங்குகள் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) அவற்றை அதிகப்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) தமிழ்நாட்டில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தற்போது 230 கிடங்குகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மொத்த கொள்ளளவு சுமார் 7.50 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

(ஆ) ஆண்டிப்பட்டி மற்றும் கும்மிடிப்பூண்டி தாலுகாக்களில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு கிடங்குகள் 66 இலட்சம் ரூபாயில் கட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 69, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

69—

வீடு கட்டக் கடன் தொகை

***37365—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2004 ஜூலை 29]

(அ) தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்கு வீடு கட்ட வழங்கப்படும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும்போது ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியில் 50 சதவிகிதம் மாதத் தவணைகளாகப் பிடித்தம் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பிற அரசு ஊழியர்களுக்கு உள்ளது போல பிடித்தம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு ஆணை எண் 366, வீட்டுவசதித் துறை நாள் 20–3–1995–ன்படி வாரியத்தில் வெளியிடப்பட்ட (நிரந்தரம்) வாரிய ஆணை (தலைவர்) எண் 85 நாள் 7–4–1995–ல் வீடு கட்டும் முன் பணத்தொகை பிடித்தம் 40 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாணை அரசாணைக்குட்பட்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) (1) 20 ஆண்டுகளுக்கு மேல் கடனைத் திரும்பச் செலுத்தும் காலம் உள்ள வாரியப் பணியாளர்கள் மற்றும் அதிகப்படியான வீடு கட்ட முன்பணத் தொகை பெறுபவர்களின் பிடித்தத்தொகை, அவர்கள் மீதமிருக்கும் பதவிக்காலம் முழுவதிலும் அடிப்படைச் சம்பளம் plus அகவிலைப்படியில் 40 விழுக்காட்டிற்கு குறைவில்லாமலும், அசல் 180 தவணைகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். மேலும் 40 விழுக்காடு மதிப்பிடுகையில் ஏற்கெனவே பிடித்தம் செய்யப்பட்டு வரும் வீடு கட்டுவதற்கான முன்பணத் தொகையினையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

(2) கடனைத் திரும்பச் செலுத்தும் பதவிக் காலம் 20 ஆண்டுகளுக்குக் குறைவாக உள்ள வாரியப் பணியாளர்களின் அசல் மற்றும் வட்டி பிடித்தத்தொகை அவர்கள் பதவிக் காலத்தில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னர் பிடித்தம் செய்யப்பட வேண்டும். அப்பிடித்தம் அடிப்படைச் சம்பளம் plus அகவிலைப்படியில் 40 விழுக்காடு இருத்தல் வேண்டும். இறப்பு ஓய்வு பணிக்கொடையினையும் கணக்கில் கொள்ளலாம். ஏற்கெனவே பிடித்தம் செய்யப்பட்ட வீடு கட்டுவதற்கான முன்பணத் தொகையினையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரியப் பணியாளர்கள் வீடு கட்ட பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துகிறபோது முன்பணத் தொகை பிடித்தம் 50 விழுக்காடு உயர்த்தப்பட்டபோது 120 அல்லது 130 தவணைகளிலேகூட கடனைத் திருப்பிச் செலுத்துகிற நிலை முற்றுப்பெறுகிறது. இதுபோன்ற நிலை ஏற்படுகிறபோது 180 தவணைகளுக்கும் கடனைச் சமமாகப் பகிர்ந்து செலுத்தும் நிலை உருவாக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறிய பதிலிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். 20 வருடங்களுக்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு பிடித்தம் 40 சதவீதம். 20 வருடங்களுக்குக் குறைவாகப் பணிக்காலம் உள்ளவர்களுக்குப் பிடித்தம் 40 plus 10. இது மின்வாரியத்திற்கு மட்டுமல்ல; அரசாங்கம் மூலம் அளிக்கப்பட்ட ஆணை; எல்லோருக்குமே இது பொருந்தும். எனவே, இதைப் பரிசீலிப்பதற்குத் தற்போது வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 70, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

70—

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

*** 44740—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதியில் கூடுதலாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?